ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2461/41 – 2025 නොවැම්බර් මස 07 වැනි සිකුරාදා – 2025.11.07
2461/41 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

**84 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**2024, ஓகத்து மாதம் 21 ஆம் திகதிய 2398/19 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகைக்குரிய திருத்தம்**

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நீர் வழங்கல் திட்டங்களின் ஊடாக நீர் விநியோகிக்கப்படும் “துறைமுக நகரம்” வகையை சேர்ந்த பாவனையாளர்களுக்குரிய நீர்க் கட்டணத்தை (வகை இலக்கம் 78) மாத்திரம் வணிக தொகுதியுடன் இணைத்து 2025, செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் பின்வருமாறு திருத்தம் செய்வதாக 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைச் சட்டத்தின் 84 ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2024, ஓகத்து மாதம் 21 ஆம் திகதிய மற்றும் 2398/ 19 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட “துறைமுக நகரம்” வகையைச் சேர்ந்த பாவனையாளர்களுக்கு மாத்திரம் இத்திருத்தம் உரித்துடையதாகும்.

வைத்தியர் எச். எம். சுசில் ரணசிங்ஹ,
வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்.

வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு,
12 ஆவது மாடி, செத்சிறிபாய, கட்டம் II,
பத்தரமுல்லை.
2025, ஒற்றோபர் 14.

A1 - G45723- 04(2025/11)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

எந்தவொரு வளாகமாயினும் குறித்த வளாகத்துக்குரிய மாதாந்த நீர்க் கட்டணத்துடன் பாவனைக் கட்டணம், மாதாந்த சேவைக் கட்டணம், ஏனைய கட்டணங்கள் மற்றும் உரிய வரித் தொகைகள் உள்ளடக்கப்படும், நீர்ப்பட்டியலில் பொதுவாக மொத்த மாதாந்த கட்டணம் சுட்டிக்காட்டப்படுவதுடன், பாவனையாளரொருவருக்கு தனது நீர்ப்பட்டியலுக்கு மேலதிகமாக பெறுமதி சேர் வரி/ இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி ( VAT) விலைப்பட்டியல் (Invoice) ஒன்று தேவைப்படுமிடத்து தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையில் முன் பதிவினை மேற்கொள்வதன் மூலம் அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## கட்டண விதிப்பு அட்டவணை -08 (வகுதி இலக்கங்கள் 65, 70, 71, 74, 77,78, 79, 80, 82, 98)

வணிக நோக்கத்துடன் இயங்குகின்ற நிறுவனங்கள், அரச தொழில் முயற்சி நிறுவனங்கள், சுற்றுலா விடுதிகள் மற்றும் தங்கும் விடுதிகள், முதலீட்டு ஊக்குவிப்பு வலய கைத்தொழில்கள், கூட்டிணைந்த அபிவிருத்திகள், துறைமுக நகரம், பிற வணிக மற்றும் தனியார் நிறுவனங்கள் தூதரக குடியிருப்புகள் - பெறுமதி சேர் வரி அறவிடப்படாத வணிக நிறுவனங்கள், சபை வளாகங்களுக்கு நீர் வழங்குதல் மற்றும் பவுசர்களுக்காக நீர் விநியோகித்தல்.

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ ஒரு அலகு | ரூபா |
| 00- 25 | 150.00 | 500.00 |
| 26- 50 | 150.00 | 750.00 |
| 51-75 | 150.00 | 1,500.00 |
| 76-100 | 150.00 | 1,750.00 |
| 101-200 | 150.00 | 2,000.00 |
| 201-500 | 150.00 | 3,000.00 |
| 501-1000 | 150.00 | 5,000.00 |
| 1,001-2000 | 150.00 | 10,000.00 |
| 2,001-4000 | 150.00 | 15,000.00 |
| 4,001-10000 | 150.00 | 30,000.00 |
| 1,0001-20000 | 150.00 | 60,000.00 |
| 20,000 ற்கு மேல் | 150.00 | 130,000.00 |

**கட்டண விதிப்பு - அட்டவணை - 09 (வகுதி இலக்கங்கள் 72)**

**கப்பல் சேவைகள்**

| அலகுகளின் எண்ணிக்கை | பாவனைக் கட்டணம் | மாதாந்த சேவைக் கட்டணம் |
|---|---|---|
| | ரூபா/ ஒரு அலகு | ரூபா |
| 00- 25 | 750.00 | 500.00 |
| 26- 50 | 750.00 | 750.00 |
| 51-75 | 750.00 | 1,500.00 |
| 76-100 | 750.00 | 1,750.00 |
| 101-200 | 750.00 | 2,000.00 |
| 201-500 | 750.00 | 3,000.00 |
| 501-1,000 | 750.00 | 5,000.00 |
| 1,001-2,000 | 750.00 | 10,000.00 |
| 2,001-4,000 | 750.00 | 15,000.00 |
| 4,001-1,0000 | 750.00 | 30,000.00 |
| 10,001-20,000 | 750.00 | 60,000.00 |
| 20,000 ற்கு மேல் | 750.00 | 130,000.00 |

2398/19 ஆம் இலக்கத்தையுடைய 2024 ஓகத்து மாதம் 21 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் ஏனைய நிபந்தனைகள் யாவும் மாற்றமின்றி நடைமுறையிலிருக்கும்.

EOG 11- 0054

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.